DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No.113 /2023

Deposition of Witness : DW2

| | | | |
|---|---|---|---|
| Name | : கார்த்திகேயன் | Father's/Husband's Name : | கொத்தாளமுத்து |
| Village | : வள்ளல்நதி | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.03.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் எனது சகோதரர்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து மொத்தம் 11 1/2 செண்ட் என்றால் சரிதான். மேற்படி இடத்தில் மேல்பக்கம் உள்ள 3 1/2 செண்ட் இடத்திற்காக தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார்என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கு கிழக்கு பக்கம் என்னுடைய வீடு இருக்கிறது என்றால் இல்லை. அது குடோனாக இருக்கிறது. அது எனது அப்பா காலத்தில் கட்டப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் என்னுடைய வீடு இருப்பதாக வாதி சொல்லியுள்ளதற்கு ஆட்சேபணை தெரிவித்து எனது எதிர்வழக்குரையில் எந்த விபரமும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான்குமால் தவறாக உள்ளது. தாவா சொத்திற்கு கீழ்பக்கம்உ ள்ள வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன் என்றாலும் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) தாவா சொத்தில் உள்ள வீட்டை எனது அப்பா கட்டியதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். எனது அப்பா தாவா சொத்தை வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகளுக்கு பிரித்து கொடுத்த பிறகு வாதி அவருக்குரிய பாகத்தை ரூ.15,00,000/- செலவு செய்து வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, அது எனது அப்பா கட்டிய வீடு. எனது அப்பா கொடுத்த பணத்தில் எனது அம்மா பெயரில் கடந்த 22.12.1984 மற்றும் 05.01.1985ம் தேதிகளில் தாவா சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பா அரசு ஒப்பந்ததாரராக இருந்த போது வந்த வருமானத்தை வைத்து தாவா சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல, எனது அம்மா நகைகளை வைத்து

வாங்கப்பட்டது. எனது அம்மாவிற்கு வழக்கு சொத்தை கிரையம் வாங்கும் அளவிற்கு வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல.

3) தாவா சொத்துக்கள் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதை எனக்கும் வாதி மற்றும் 2ம் பிரதிவாதிக்கும் பிரித்து கொடுத்துவிட்டார்கள் என்றாலும் 1ம் பிரதிவாதிக்கு ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள இடத்தை அவரது பாகத்திற்காக கொடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. வாதி தனக்கு பாகமாக கிடைத்த சொத்தில் தா ன் வீடு கட்டியிருக்கிறார் என்றாலும் நாங்கள் சொல்வது போல் ஆக்கிரமிப்புசெய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 05.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN Date: 2026.03.05 13:28:20 +0530

District Munsif,

Aundipatti.